بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 17/02/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பை ஒட்டி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ், முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சில அறிவுச் சாதனைகள் பற்றிய, ஜமாஅத் அல்லாத அறிஞர்களின் நற்தாக்கங்களைப் பற்றிய எடுத்துரைப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

ஃபிப்ரவரி 20 ஆம் தேதி, ஜமாஅத்தில், முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு தொடர்பாக நினைவு கூரப்படுகிறது என்பதை ஒவ்வோர் அஹ்மதியும் அறிவார். இதையொட்டி ஜமாஅத்களில் கூட்டங்களும் நடைபெறுவதுண்டு. இந்த முன்னறிவிப்பு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஒரு மகன் பிறப்பார்; அவர் பல சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருப்பார் என்பது தொடர்பாக இருந்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்புச் சொற்களை வாசித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு, முன்னறிவிப்புக் காலத்திற்குள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பிறந்தது மற்றும் அன்னார் அந்த முன்னறிவிப்புக்குப் பொருந்தக்கூடியவராக இருந்தது குறித்து சுருக்கமாக எடுத்துரைத்தார்கள்.*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இப்போது நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அறிவுசார் மற்றும் பல்வேறு சிறப்புப் பணிகளிலிருந்து சிலவற்றைப் பற்றிக் கூறுவேன். ஆனால், அதற்கு முன் கண் முன் நிறுத்த வேண்டிய விஷயமாவது, உடல் ஆரோக்கியத்தைப் பொருத்தவரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் குழந்தைப் பருவம் மிகவும் பலவீனமாக கழிந்தது; உலகக் கல்வியின் அடிப்படையில் அன்னாரது கல்வி இல்லாததற்குச் சமமாக இருந்தது. ஆனால், அல்லாஹ் அன்னாரை அக மற்றும் புற அறிவுகளால் நிரப்புவதாக வாக்குறுதி அளித்திருந்தான். எனவே, அல்லாஹ் அறிவைத் திகைப்படையச் செய்யும் சொற்பொழிவுகளையும் குத்பாக்களையும் அன்னாரை வழங்க வைத்தான். எத்தகைய கட்டுரைகளை அன்னார் எழுதினார்கள் என்றால், அவற்றிற்கு அவையே நிகர் ஆகும்.

**அந்நியர்களும் இதை ஒப்புக் கொள்கிறார்கள். இன்று நான் இது தொடர்பாக சில சான்றுகளை எடுத்து வைப்பேன். ஆனால், அதற்கு முன் நான் சில தரவுகளை முன்வைக்கிறேன்.** அன்னாரது நூல்கள், உரைகள், சொற்பொழிவுகள், தூதுச் செய்திகள் மற்றும் கட்டுரைகள் போன்றவை வெளிவந்துள்ளன. அல்லது இப்போது ஏறக்குறைய முழுமையாகி வெளியாகத் தயாராக இருக்கின்றன. அவை அன்வாருல் உலூம் என்ற வடிவில் வெளியாகின்றன. அவை மொத்தம் 38 தொகுதிகள் ஆகி விடும். அவற்றின் எண்ணிக்கை 1424 ஆகும். அவற்றின் மொத்த பக்கங்கள் கிட்டத்தட்ட 20,340 ஆகி விடும்.

தஃப்ஸீரே கபீர், தஃப்ஸீரே ஸகீர் மற்றும் இதர விரிவுரைகளின் உள்ளடக்கங்களின் பக்கங்கள் 28,735 ஆகும். 1808 ஜுமுஆ குத்பாக்கள் உள்ளன. 51 நோன்புப் பெருநாள் குத்பாக்கள் உள்ளன. 42 ஹஜ்ஜுப் பெருநாள் குத்பாக்கள் உள்ளன. 150 நிக்காஹ் குத்பாக்கள் உள்ளன. ஷூரா குத்பாக்கள் தொகுதி 1 மற்றும் 3 வெளியாகியுள்ளது. அவற்றின் பக்கங்கள் 2131 ஆகும். அந்தப் பக்கங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டினால், இவை ஏறத்தாழ 75,000 பக்கங்கள் ஆகின்றன.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் Research Cell ஐக் சான்றாகக் கொண்டு, இதுவரை வெளிவராத கட்டுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் மஜாலிஸே இர்ஃபான் - இறைஞானம் மிக்க சபைகள் ஆகியவற்றின் கணக்கெடுப்பையும் முன் வைத்தார்கள். மேலும், கூறினார்கள்:* இது மிகவும் விசாலமான ஓர் அறிவுக் களஞ்சியம் ஆகும்.

இப்போது நான் முதலில் அன்னாரது அறிவுசார் அரும் பணிகளிலிருந்து **திருக்குர்ஆனின் மொழியாக்கங்கள் மற்றும் விரிவுரைகளின் சில தரவுகள்** மற்றும் அந்நியர்கள் இதுகுறித்து கூறிய சில கருத்துகளை முன் வைக்கிறேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஃப்ஸீரே கபீரில் 59 சூராக்களின் விளக்கவுரையை எடுத்துரைத்துள்ளார்கள். அது 10 தொகுதிகளில் வெளியாகியுள்ளது. (இவை போகவும்) அன்னாரது பல திருக்குர்ஆன் விளக்கவுரைக் குறிப்புகளும் கிடைத்துள்ளன. அவற்றின் பக்கங்களின் எண்ணிக்கை ஆயிரங்களில் உள்ளது. எப்போதாவது இவையும் வெளியாகிவிடும். திருக்குர்ஆனின் சொற்றொடர் மொழியாக்கம் என்ற அன்னாரின் ஒரு மாபெரும் பணி தஃப்ஸீரே ஸகீர் வடிவில் உள்ளது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஃப்ஸீரே ஸகீரைப் பற்றி ஓரிடத்தில் கூறுகிறார்கள்:** இதுவரை செய்யப்பட்டுள்ள திருக்குர்ஆன் மொழியாக்கங்களில் எந்த மொழியாக்கத்திலும், இதில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ள அளவுக்கு, உருது மற்றும் அரபு மொழிமரபு கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது எனது கருத்தாகும்.

**அன்னார் கூறுகிறார்கள்:** கடந்த 1300 ஆண்டுகளில் பெரும் பெரும் ஆற்றல் மிக்க இளைஞர்கள் இருந்துள்ளார்கள். ஆனால், எந்தப் பணியை செய்வதற்கு அல்லாஹ் எனக்கு நல்வாய்ப்பு வழங்கினானோ அதற்கான

நல்வாய்ப்பு அவர்களில் எவருக்கும் கிடைக்கவில்லை. உண்மையில், இது இறைவனின் பணியாகும். அவன் தான் நாடுபவர் மூலம் செய்ய வைத்து விடுகிறான்.

**பிறகு, பிறிதோரிடத்தில் அன்னார் கூறுகிறார்கள்:** அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் முழுத் திருக்குர்ஆனின், அதாவது, 'அல்ஹம்துலில்லாஹ்' முதல் 'வந்நாஸ்' வரை சிறு விளக்கத்துடன் கூடிய மொழியாக்கம் முழுமையடைந்து விட்டது. அதை தஃப்ஸீரே கபீர் உடன் ஒப்பிடும் போது தெரியவந்தது என்னவென்றால், அதில் பல கருத்துக்கள் எப்படி ரத்தினச் சுருக்கமாக வந்துள்ளனவென்றால், அவை தஃப்ஸீரே கபீரில் கூட இல்லை.

பிறகு, **திருக்குர்ஆனின் ஆங்கில விரிவுரை எனும் ஒரு முக்கிய பணியும் நடந்தது. அதை நாம் '5 Volume commentary' என்கிறோம்.** அந்த விளக்கவுரையின் துவக்கத்தில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் எழுது கோலால் எழுதப்பட்ட மிகவும் கருத்தாழம் மிக்க ஒரு முகவுரையும் இணைந்துள்ளது. பிற வேத நூல்கள் இருக்கையில் திருக்குர்ஆனின் தேவை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை வரலாறு, திருக்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டது மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள் ஆகியவற்றின் மீது முற்றிலும் தனித்துவ வாய்ந்த மற்றும் மனதைக் கவரும் தோரணையில் அதில் ஒளியிடப்பட்டுள்ளது.

அந்த **முகவுரையின் இறுதியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதையும் எழுதியுள்ளார்கள்:** நான் இதையும் கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மாணவனாக இருந்த காரணத்தால், எனது விளக்கவுரையில் பல கருத்துகள் நிச்சயம் நான் அன்னாரிடம் இருந்து கற்றுக் கொண்டவையாக உள்ளன. எனவே, **அந்த விரிவுரையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கவுரை, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் விளக்கவுரை மற்றும் எனது விளக்கவுரையும் வந்து விடும்.**

இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத் தனது ஆன்மாவால் மணம் கமழச் செய்து இந்தக் காலத்துக்குத் தேவையான அந்த அறிவுகளை அன்னாருக்கு வழங்கினான். எனவே, இந்த விளக்கவுரை பல நோயாளிகளை குணப்படுத்த காரணமாக அமையும்; பல (ஆன்மீகக்) குருடர்கள் இதன் மூலமாக கண்களைப் பெறுவார்கள்; செவிடர்கள் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். ஊமைகள் பேச ஆரம்பித்து விடுவார்கள். முடவர்கள், இயலாதவர்கள் நடக்க ஆரம்பித்து விடுவார்கள்; அல்லாஹ்வின் வானவர்கள் இதன் கருத்துகளுக்கு பரக்கத்தை வழங்குவார்கள் மற்றும் இது எந்த நோக்கத்திற்காக வெளியிடப்படுகிறதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும் என்று நான் நம்புகிறேன். அல்லாஹும்ம ஆமீன் (அல்லாஹ்வே நீ அவ்வாறே செய்வாயாக!).

**ஃபதஹ்பூரைச் சேர்ந்த அல்லாமா நியாஸ் தஃப்ஸீரே கபீர் பற்றி இவ்வாறு எழுதுகிறார்:** முற்றிலும் ஒரு புதிய கோணத்தில் திருக்குர்ஆனைப் படிப்பதற்கான சிந்தனையை தாங்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த விளக்கவுரை தனது வகையைப் பொருத்தவரை முற்றிலும் முதல் விளக்கவுரையாகும். இதில் அறிவையும் நூல்களின் சான்றையும் மிக அழகிய முறையில் ஒன்று படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் வஃபாத்தின் போது, மவ்லானா அப்துல் மாஜித் தர்யாபாதி இவ்வாறு எழுதினார்:**

திருக்குர்ஆன் மற்றும் திருக்குர்ஆனின் அறிவை சர்வதேச அளவில் பரப்புதல் மற்றும் மூலை முடுக்குளில் எல்லாம் இஸ்லாத்தைப் பரப்பும் தப்லீஃக் பணிகளில் அன்னார் ஈடுபாட்டுடனும் திட உறுதியுடனும் நீண்ட வாழ்நாளில் முயற்சிகளைத் தொடர்ந்து வந்தார்கள். அவற்றிற்கான நற்கூலியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

**லாஹூரின் 'இம்ரூஸ்' பத்திரிக்கை தஃப்ஸீரே ஸகீரைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளது:** தற்போது தஃப்ஸீரே ஸகீர் பார்வையில் உள்ளது. இந்தத் தஃப்ஸீர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் மர்ஹூம் அல்ஹாஜ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அவர்களின் சிந்தனை முயற்சியின் விளைவாகும். திருக்குர்ஆனின் அரபு வாக்கியங்களின் உருது மொழிபெயர்ப்புடன், பல இடங்களை விளக்குவதற்காக, அடிக்குறிப்புகளும் விரிவான குறிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு மற்றும் அடிக்குறிப்புகளின் மொழிநடை மிகவும் சாதாரணமானதாகவும், எளிமையாகப் புரியக்கூடியதாகவும் உள்ளது.

**'கந்தீல்' எனும் ஒரு வாரப்பத்திரிக்கை 1966 இல் எழுதுகிறது:** எல்லா அறிவுத்திறன் உள்ளவர்களும் பயன்பெறும் பொருட்டு, தஃப்ஸீரே ஸகீரின் மொழிபெயர்ப்பு மற்றும் அடிக்குறிப்பின் மொழிநடை எளிமையாகப் புரியக்கூடியதாக உள்ளது. மொழியாக்கம் மற்றும் விளக்கவுரையில் இந்த விஷயமும் கடைபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது, முன்சென்ற அனைத்துத் திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் விரிவுரைகளும் கடைசிவரை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. பிறகு கூறுகிறது: திருக்குர்ஆனை இவ்வளவு அழகாக அச்சடித்து வெளியிடுவது இஸ்லாத்திற்கு செய்யும் மாபெரும் தொண்டாகும்.

பிறகு, திருக்குர்ஆனின் ஆங்கில விளக்கவுரையின் மார்க்க மற்றும் மொழிப்புலமையின் சிறப்புகள், உயர்தரத்தில் உள்ள ஐரோப்பிய, அமெரிக்க அறிஞர்களையும் தாக்கத்திற்குள்ளாக்கியது. அவர்கள் இதை சிறப்பான முறையில் திறனாய்வு செய்து கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

உதாரணமாக, **புகழ்பெற்ற அறிஞர் A.J.Arberry கூறுகிறார்:** தஃப்ஸீரின் ஆரம்பத்தில் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அவர்கள் தாமே எழுதிய ஒரு நீண்ட முகவுரை இருக்கிறது. நாம் இந்தப் பணியை இஸ்லாத்தைப் பற்றிய அறிவின் மீதான ஆர்வத்தின் மாபெரும் நினைவுச் சின்னம் என்று கூறி முன்வைத்தால், அது சிறிதும் மிகையாகாது. அதைத் தயார்படுத்தும் ஒவ்வொரு கட்டத்திலும் நம்பத்தகுந்த விளக்கவுரை நூல்கள், அகராதிகள்

மற்றும் வரலாறு முதலியவற்றிலிருந்து பயன்பெறப்பட்டுள்ளது. மொழியாக்கத்தின் ஆங்கிலம், பிழைகள் இன்றியும் மிகுந்த கண்ணியமிக்கதாகவும் உள்ளது. முஸ்லிம் அல்லாதவர்களின் ஆட்சேபனைகளுக்குக்கான மறுப்பும் இதில் உள்ளது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் சொற்பொழிவுகள் வடிவில் நம் முன் வைத்த அறிவுக் கருவூலத்தை அந்நியர்கள் எப்படிப் பார்த்தார்கள்** என்பது பற்றிக் கூறுகிறேன். உதாரணமாக, அன்னாரது ஒரு சொற்பொழிவு **'நிஸாமே நவ்' - புதிய அமைப்பு** என்ற தலைப்பில் உள்ளது.

இதைப் பற்றி **எகிப்து அறிஞர் மஹ்மூத் கூறுகிறார்:** ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் ஆங்கிலம் அறிந்த வர்கத்தில் இந்த ஓசை பரப்பப்பட்டால், இன்னும் கூறுவதாயின், சுயமே இந்தியர்கள் மத்தியிலும் கிழக்கத்தியர்கள் மத்தியிலுமே பரப்பப்பட்டால், நிச்சயமாகத் தாக்கத்தைக் காட்டும்.

பிறகு, **'இஸ்லாம் மே(ன்) இக்திலாஃபாத் கா ஆகாஸ்' - இஸ்லா(மிய மக்களிட)த்தில் கருத்து வேறுபாட்டின் ஆரம்பம்** என்ற அன்னாரின் ஒரு சொற்பொழிவு உள்ளது. இந்த சொற்பொழிவு எந்த அளவு அறிவுப்பூர்வமானதாகவும், இஸ்லாமிய வரலாற்றை முழுமையாக அறிந்த வண்ணமும் இருந்தது என்றால், பெரும் பெரும் வரலாற்று அறிஞர்கள் கூட, ஹுஸூருக்கு முன் தம்மைப் பள்ளிக்கூடத்தின் சிறுவர்களாகக் கருத ஆரம்பித்து விட்டனர்.

**லாஹூர் இஸ்லாமியா கல்லூரியின் பேராசிரியர், சய்யித் அப்துல் காதிர் சாஹிப் எழுதுகிறார்:** இஸ்லாமிய வரலாற்றில் ஆர்வம் கொண்டிருக்கக்கூடிய மக்களின் பார்வை, இதற்கு முன் இத்தகைய ஆதாரப்பூர்வமான கட்டுரையை ஒருபோதும் கடந்திருக்காது என்பது எனது கருத்தாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களின் ஒரு சொற்பொழிவு, **'இஸ்லாம் கே இக்த்திஸாதீ நிஸாம்' - இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு** பற்றியும் இருந்தது. இந்த சொற்பொழிவு இரண்டரை மணி நேரம் வரை தொடர்ந்தது. கல்வி பயின்ற வர்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இதைக் கேட்டார்கள்.

**லாஹூர் உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் லாலா ராம் சந்த் மச்சிந்தா சாஹிப் கூறினார்:** இந்த சொற்பொழிவால் நான் மிகவும் பயனடைந்தேன். இஸ்லாம் தன்னுடைய சட்ட திட்டங்களில் முஸ்லிம்களை மட்டுமே கவனத்தில் கொள்கிறது என்று நான் முன்னர் தவறாக எண்ணியிருந்தேன். ஆனால், இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரின் உரையிலிருந்து, இஸ்லாம் எல்லா மனிதர்களிடத்தும் சமமாக நடந்து கொள்வது குறித்தே போதனை வழங்குகிறது எனத் தெரிய வந்தது.

**1924** இல் ஹுஸூர் (ரலி) அவர்கள் ஐரோப்பா சென்ற போது, வழியில் அரபு நாடுகளிலும் தங்கினார்கள். இது சம்பந்தமாக **தமாஸ்கஸின் 'ஃபத்ஹுல் அரப்' பத்திரிக்கை ஆகஸ்ட் 10, 1924 அன்று இதழில் இவ்வாறு எழுதுகிறது:**

“கலீஃபா அவர்கள் தமது வயதின் **40** வது ஆண்டில் இருக்கிறார்கள். முகத்தில் கருமையான, அடர்த்தியான தாடி வைத்துள்ளார்கள். முகம் கோதுமை நிறத்தில் இருக்கிறது. கம்பீரமும் கண்ணியமும் முகத்தில் மேலோங்கி இருக்கிறது. கண்கள் இரண்டும் தூய்மை, புத்திசாலித்தனம், அசாதாரணமான அறிவு மற்றும் புத்திக்கூர்மையை எடுத்துக் கூறுகின்றன.

பனிக்கட்டியைப் போன்ற தமது வெள்ளை தலைப்பாகையை அவர்கள் அணிந்திருக்கும் முகத்தோற்றத்தில் இந்த அறிவுத்திறனை நீங்கள் பார்த்தீர்களாயின், நீங்கள் அவரைப் புரிவதற்கு முன் உங்களைப் புரியக்கூடிய இவ்வாறான ஒரு மனிதருக்கு முன்னால் நீங்கள் நிற்கின்றீர்கள் என்று உங்களுக்கு உறுதி ஏற்பட்டுவிடும். அவர்களின் உதட்டில் புன்சிரிப்பு பூத்துக் கொண்டே இருக்கிறது. அது சிலவேளை வெளிப்படுகிறது. சில வேளை மறைந்து விடுகிறது. அந்தப் புன்சிரிப்புக்குக் கீழ் இருக்கும் அர்த்தங்கள் மற்றும் அதில் உள்ள கம்பீரத்தால் நீங்கள் வியப்படைந்து விடுவீர்கள்.”

இது போன்ற எண்ணற்ற நற்தாக்கங்கள் இருக்கின்றன. கருத்துகளின் குவியல்களோ மிக ஏராளமாக இருந்தன. நான் அவற்றை ஒன்று திரட்டி வைத்திருந்தேன். ஆனால், நேரத்தின் காரணமாக சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எந்த விஷயங்களை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னறிவிப்பில் கூறியிருந்தானோ அவை ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களிடம் நிறைவேறின.

அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்த அறிவு மற்றும் இறைஞானத்துடன் பெரும் பெரும் அறிஞர்களாலும் எதிர்த்து போட்டியிட முடியாமல் இருந்தது. அன்னாரால் வழங்கப்பட்டுள்ள இலக்கியம் ஜமாஅத்தின் ஒரு கருவூலமாகும். வெளியாகியுள்ள அன்னாருடைய குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளை நாம் படிக்க வேண்டும். இப்பொழுது மொழியாக்கப் பணியும் நடந்து கொண்டிருக்கிறது.

அல்லாஹ் நமக்கு இந்த அறிவுக் களஞ்சியத்திலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)